

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | சனவரி 27, 2022 | புரட்சி 21 | முழக்கம் 02 | விலை: ரூ.3.00

## இடஒதுக்கீடு வரலாற்றில் புதிய மைல்கல்

# தகுதி, திறமை, புரட்டு வாதங்களைத் தகர்த்து எறிந்தது உச்சநீதிமன்றம்

***மருத்துவப் படிப்பு – உயர்மட்டப் படிப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதே என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்ற நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட் மற்றும் ஏ.எஸ். போபண்ணா கடந்த ஜன.20, 2022இல் வழங்கியுள்ளனர். இது வரை வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டுக்கான தீர்ப்புகளைவிட இது முக்கியத்துவம் பெறுவதோடு இடஒதுக்கீட்டுக்கு எதிராக முன் வைக்கப் பட்டு வந்த வாதங்களை தகர்த்தெறிந் திருக்கிறது. தீர்ப்பின் முக்கிய பகுதி:***

பொதுத் தேர்வுகள் பங்கேற்கும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் போட்டியிடுவதற்கான சம வாய்ப்புகளை உருவாக்குகிறது என்றாலும் இதில் இடஒதுக்கீடு வழங்கப்படுவதன் வழியாக வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. எப்படி என்றால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இந்த வாய்ப்புகளின் வழியாகவே பயனடைய முடிகிறது. இந்தப் பயன் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைத்து விடாமல் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றனர். அதற்கு அடிப்படையான காரணம், சமூகத் தடைகள்; அதாவது நமது சமூகக் கட்டமைப்பு இந்தப் பயன்களை கிடைக்க விடாமல் தடுத்து வருகிறது. (இந்த சமூகத் தடைக்கு நீதிமன்றம் பயன்படுத்தியுள்ள சொல் - Structural barriers) தகுதி என்பதை ஜனநாயக சக்தியாக மாற்றுவதற்கு இடஒதுக்கீடு ஒன்று தான் வழியாகும். தகுதியை ஜனநாயக சக்தியாக்கும்போது காலம் காலமாக இழைக்கப்பட்ட அநீதிகளையும் மறுக்கப்பட்ட உரிமைகளையும் அந்த சக்தி சமன் செய்கிறது. தகுதியை இப்படி ஜனநாயக சக்தியாக்காமல், தனி நபர் தகுதிக்கு மட்டும் உரிமை கோருவது யாருக்குப் பயன்படும் என்றால், காலம்காலமாக மாற்றங்களைத் தடுத்து வளர்ச்சிகளை முடக்குவோருக்குத் தான்.

பொதுத் தேர்வில் அனைவரும் சமமாகப் பங்கேற்கச் செய்வதால் மட்டுமே பல்வேறு தளங்களில் பரவலாக ஆழமாகப் பதிந்துள்ள சமத்துவமின்மைய சரி செய்துவிட முடியாது. பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட சில குறிப்பிட்ட வகுப்பினருக்கு. கல்வி வாய்ப்புகளோ, வழங்கப்பட்ட வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலோ கிடைக்கப் பெறாதவர்களாகவே உள்ளனர்.

அதே நேரத்தில் முன்னேறிய வகுப்பினருக்கு தரமானப் பள்ளிகளில் படிக்கும் வாய்ப்புகளுக்கோ, போட்டித் தேர்வுகளுக்கான தனிப் பயிற்சி பெறுவதற்கோ எந்தத் தடையும் இல்லாததோடு, அவர்களுக்கான சமூக உறவுகள் மற்றும் 'கலாச்சார மூலதனம்' வலிமையானதாகவே இருக்கின்றன. கலாச்சார மூலதனம் (Cultural Capital) என்று குறிப்பிடுவது அவர்களின் சரளமான பேச்சு நடை, கல்விக்கான 'கருவிகள்' கிடைக்கக் கூடிய வாய்ப்புகள், படிப்பதற்கான புத்தகங்கள் மற்றும் கற்றறிந்தவர்களின் சூழல் போன்றவையே 'கலாச்சார மூலதனம்' என்பதற்கான அர்த்தம். இந்த வாய்ப்புகள் முன்னேறிய சமூகத்தினருக்கு அவர்களின் குடும்பங்கள் வழியாகவே கிடைக்கிறது. கலாச்சார மூலதனம் முன்னேறிய சமூகத்தில் பிறந்த குழந்தைகளுக்கு நல்வாய்ப்புகளை உறுதி செய்கிறது. குடும்பச் சூழல் அவர்களை இயல்பாகவே பயிற்றுவிக்கிறது. அதன் காரணமாக உயர்கல்வியை எட்டி விடுகிறார்கள். தங்கள் குடும்பச் செல்வாக்கின் காரணமாக உயர் பதவிகளையும் அடைய முடிகிறது.

மாறாக இதே வாய்ப்புகள் பிற்படுத்தப்பட்ட சமூகத்திலிருந்து வரும் ஒவ்வொரு நபருக்கும் கேடுகளை உருவாக்கி வருகிறது. இவர்கள் முதல் தலைமுறையாகப் படிக்க வருகிறார்கள் பரம்பரைத் தொழில்களில் (உழன்று கொண்டிருக்கும்) குடும்பத்திலிருந்து வருகிறவர்கள். இந்த சமூகப் பின்னணி திறந்தப் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சிகளை பெறுவதற்கான திறமைகளை இவர்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதில்லை. இப்படி ஒருவர் தன்னை 'தகுதி'க்குரியவராக மாற்றிக் கொள்ள விடாமல் சமூகப் பின்னணி தடுத்து விடுகிறது. இந்த நிலையில் 'தகுதி வேண்டும்' என்ற வெற்று உணர்ச்சி முழக்கங்களால் என்ன பயன்? இந்த முழக்கங்களால் குடும்ப முன்னேற்றம், பள்ளிப் படிப்பு, சமூக மதிப்பு, இயல்பான திறமைகளை வெளிப் படுத்தும் வாய்ப்புக்கான வழிகள் அடைக்கப் படுகின்றன. மேற்குறிப்பிட்ட காரணிகளைக் கொண்டு தான் சமூகம் ஒருவருக்கான மதிப்பீட்டை நிர்ணயிக்கிறது. முன்னேற்றத்துக்கான அடிப்படை களாகவும் இந்த காரணிகளே பங்காற்றுகின்றன. ஆக, சமூகப் பின்னணியிலிருந்து 'தகுதி'யை மட்டுமே தனித்துப் பிரிந்தெடுத்துப் பேசுவதால், தடைகளைத் தகர்த்து முன்னேறிச் செல்ல விரும்புவோர் தடுக்கப்படுவதோடு அவர்களின் கவுரவத்தையும் குலைத்து விடுகிறது.

ஒரு தேர்வில் பெறக் கூடிய மதிப்பெண் மட்டும்தான் தகுதிக்கான அளவுகோல் என்ற கருத்தை ஆழமான மறுபரிசிலனைக்கு உட்படுத்துதல் தேவையாகிறது. கல்வி வாய்ப்புகளைப் பகிர்ந்தளிக்க தேர்வுகள் தேவையானதாக எளிமையாக நடைமுறைப் படுத்தக்கூடிய ஒரு முறையாக இருக்கிறது என்பது உண்மைதான். அதே நேரத்தில் மதிப்பெண் மட்டுமே ஒரு தனிநபருக்கான மிகச் சிறந்த அளவுகோலாகி விடாது. மிக உயர்ந்த மதிப்பெண் பெற்ற ஒருவர், நல்ல செயலுக்கு தனது திறமையை பயன் படுத்தாதபோது, அவரை திறமையானவர் என்று எப்படி கருத முடியும்? அதிக மதிப்பெண் மட்டுமே திறமையானவர் என்பதற்கு அடையாளமாகி விடுமா? பாதிக்கப்பட்ட சமூகச் சூழலில் உள்ள ஒருவர் தான் முன்னேறிச் செல்வதற்கான துணிவையும், நெகிழ்ச்சியையும் நோக்கிப் பயணிப்பதற்கேகூட தகுதியும் திறனும் தேவைப்படுகிறது. இதுவே அவரது திறமைக்கான வெளிப்பாடு என்றே மதிப்பிட வேண்டும். (மதிப்பெண் பெறுவது மட்டும் அல்ல).

போட்டித் தேர்வுகளை சிறப்பாக எழுதுவதுதான் தகுதிக்கான வரையறையாகப் பார்ப்பது குறுகிய பார்வை. இந்தத் தேர்வுகளில் பெறும் சிறப்பான வெற்றியால் கிடைப்பது முழுமையான சமத்துவம் அல்ல; அது வெறும் சம்பிரதாய சமத்துவமே. தேர்வுகளில் அதிக மதிப்பெண் குவிப்பது தகுதிக்கான அடையாளம் அல்ல; தகுதியை சமூகத்தோடு பொருத்திப் பார்த்து, அதற்கு புதிய அர்த்தங்களை சேர்க்க வேண்டும்; சமூகப் பயன் நோக்கிய முன்னேற்றத்துக்கு அழைத்துச் செல்வதற்கான கருவியாக தகுதி பயன்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்; சமத்துவத்தை உருவாக்கிறதா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய சமூகச் சூழலோடு தகுதியைப் பொருந்தினால், இடஒதுக்கீடு தகுதிக்குத் தடை அல்ல என்பது விளங்கும்.”

- என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

மற்றொரு முக்கிய அம்சமும் தீர்ப்பில் இடம் பெற்றுள்ளது. கல்வி - வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் 15(4), 16(4) சட்டப் பிரிவுகள். 'விரும்பினால் நிறைவேற்றலாம்' என்ற வரையறைக்குள் (Enabling Act) வருவது இல்லை. அது 15(1) வலியுறுத்தும் அடிப்படை உரிமையாகக் கருதப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெளிவு படுத்தியிருப்பது தீர்ப்பின் மற்றொரு குறிப்பிடத்தக்க சிறப்பு.

இடஒதுக்கீடு குறித்து இதுவரை வெளிவந்த தீர்ப்புகளிலேயே அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சியை நோக்கிய வெளிச்சங்களைப் பாய்ச்சுகிறது, இத் தீர்ப்பு. ●

# சமூக வலைதளங்களில் பரவி வரும் பார்ப்பனிய பயங்கரவாதம்

இணையத்தில் இயங்கிவரும் Tride மற்றும் Raytas பற்றித் தெரியுமா?

இந்தியாவில் தற்போது வலதுசாரி சிந்தனையுடன் தொடர்புடைய இரண்டு பெரிய குழுக்கள் ஆன்லைனில் இயங்கிவருகின்றன. ஒன்று ‘ட்ரைட்ஸ்’ மற்றொன்று ‘ராய்தா’.

‘ட்ரைட்ஸ்’ என்பது ‘Traditionalist’ (பாரம்பரியவாதி) என்பதன் சுருக்கமான வடிவம். அதாவது அவர்கள் இந்தியாவின் பழைய மரபுகளின்படி வாழ்வதே சரி என்று கருதுபவர்கள். சதி, குழந்தைத் திருமணம், முக்காடு போன்றவற்றை சரி என்று கருதுகிறார்கள்.

சாதி அமைப்பில் பிராமணர்கள் முதலிடத்தில் இருப்பதே சரி என்பவர்கள் இவர்கள். பெண்கள் வேலை செய்யாமல் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பார்கள்.

அவர்கள் நரேந்திர மோதியின் ஆதரவாளராகவோ, பா.ஜ.கவினராகவோ இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

இவர்கள் ஒன்றிரண்டு பேர் அல்ல. 20-23 வயதுக்குட்பட்ட இவர்கள், பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். மத்தியில் ஒரு இரக்கமற்ற தலைவர் இருக்க வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர்.

சாதி அமைப்பை நம்புவதோடு, ஆணவக் கொலைகளையும் போற்றுகிறார்கள். இந்தியாவில முஸ்லிம்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ யாரும் இருக்கக்கூடாது என்பார்கள்.

டிவிட்டரில் இயங்கும் ஒரு நபர், தானும் ஒரு ’ட்ரைட்’ஆக இருந்ததாக பிபிசியிடம் கூறினார். இவர் தலித் வகுப்பைச் சேர்ந்தவர்.

2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அவர் இன்ஸ்டாகிராமின் ‘ட்ரைட்’ குழுவில் சேர்க்கப்பட்டார். இந்து மதத்தைப் பற்றிய சரியான தகவல்களைப் பரப்புவதே இந்தக் குழுவின் நோக்கம் என்று அவரிடம் சொல்லப்பட்டது. அதனால் அதில் சேர்ந்தார்.

“நான் இந்து மதத்தின் பழைய பாரம்பரியங்களான சதி, குழந்தை திருமணம், தீண்டாமை போன்றவற்றை சரி என்று நம்பினேன். அந்த வரலாற்றில் நான் பெருமைப்பட்டேன். அதனால் நான் அந்தக் குழுவில் சேர்ந்தேன்” என்று பிபிசியிடம் தெரிவித்தார் அவர். 14-15 வயதுக்குட்பட்ட இந்து இளைஞர்களை இந்தக் குழுவில் சேர்க்கும்படி அவரிடம் சொல்லப்பட்டது.

போகப்போக குழுவுக்குள் நடந்த விஷயங்கள் அவருக்கு அதிர்ச்சி அளித்தன. குழுவில் மேலோட்டமாக புனித நூல்களைப் பற்றி பேசினாலும், அதன் உறுப்பினர்கள் வெறுப்பு நடவடிக்கைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் முக்கியத்துவம் தருவது அவருக்குப் புரிந்தது.

மேலும், அந்தக் குழுவின் உறுப்பினர்கள் தலித்துகளை இந்துக்களாகக் கருதவில்லை. இந்து தேசத்தை உருவாக்க முஸ்லிம் பெண்களை பலாத்காரம் செய்வது தொடர்பாக பேசுவது, குழந்தைகளின் கொலைகளைக்கூட நியாயப்படுத்துவது போன்றவற்றை பார்த்து அதிர்ச்சியடைந்தார் அவர்.

சாதி பெருமைக்காக செய்யப்படும் ‘ஆணவக் கொலை’களை ஊக்குவிப்பதையும், கலப்புத் திருமணம் செய்பவர்களை மிரட்டுவதையும் கவனித்தார்.

சில பெண்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சிக்கும் அளவுக்கு துன்புறுத்தல் இருந்தது என்கிறார்.

இந்த ‘ட்ரைட்’ சித்தாந்த குழு பெண்களை அடக்குமுறை செய்வதை ஆதரித்தாலும், இந்தக் குழுவில் பெண்களும் இருந்தார்கள். முகத்தை மூடிக்கொள்ளும் நடவடிக்கையை அவர்கள் ஆதரித்தார்கள்.

“நான் அவர்களுக்கு விளக்கினேன். ஆனால் அவர்கள் எதையும் கேட்க தயாராக இல்லை. சில நேரங்களில் அவர்களுக்கு இதயமே இல்லை என்று தோன்றியது. ’யாருடைய வார்த்தைகளையும் பொருட்படுத்தாத, தன் கருத்தை நிலைநாட்ட எந்த எல்லைக்கும் செல்லக்கூடிய ஆணாக இருங்கள்’ என்று என்னிடம் சொல்லப்பட்டது. ஆனால் நான் யாரையும் புண்படுத்த விரும்பவில்லை” என்றார்.

“அவர்கள் கும்பல் கொலைகளின் படங்களை பகிர்ந்து கொண்டனர், தங்கள் பகுதியில் முஸ்லிம் பையனை எப்படி அடித்தார்கள் என்பதைப் பற்றி தற்பெருமை பேசிக்கொண்டனர்” என்கிறார் அவர்.

இறுதியில் அந்த தலித் இளைஞர், குழுவையும், ‘ட்ரைய்ட்’ சமூகத்தையும் விட்டு வெளியேறி தன்னைப் போன்ற பிறருடன் இணைந்து, ‘ட்ரைட்ஸ்’ ஐ நிறுத்தும் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளார்.

**ட்ரைட்ஸ் vs ராய்தா :** ‘ட்ரைட்ஸ்’கள், தங்கள் கருத்துடன் உடன்படாத வலதுசாரிகளை ‘ராய்தா’ என்று அழைக்கத் தொடங்கினர். Right wingers என்பதன் சுருக்கமாக இது கருதப்படுகிறது.

மோனா ஷர்மா ஒரு இந்து, வலதுசாரி. ட்ரைட் மற்றும் ராய்தாவுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கிய மோனா, “‘ராய்தாக்கள்’ என்பவர்கள் ஆர் எஸ் எஸ், பாஜக, வலதுசாரி, இந்துத்துவ கொள்கையின் ஆதரவாளர்கள். யோகி, மோதி போன்ற தலைவர்களை விரும்புகிறார்கள். ஆனால் ட்ரைட்களுடன் ஒப்பிடுகையில், ‘ராய்தாக்கள்’ சட்டத்திற்கு உட்பட்ட வகையில் தங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர்,” என்றார்.

தனது “முற்போக்கான” பார்வையால், தான் ‘ட்ரைட்ஸ்’ஆல் குறிவைக்கப்பட்டதாக மோனா ஷர்மா கூறுகிறார். “ரண்டி” (விபச்சாரி) போன்ற வார்த்தைகளால் இழிவுபடுத்தப்பட்டார். அவரது கணவரின் தனிப்பட்ட தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டன.

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து தாராளவாத மற்றும் இடதுசாரி சித்தாந்தங்களைக் கொண்டவர்களுடன் ட்ரோல் செய்வதை மோனா ஒப்புக்கொள்கிறார். ஆனால் ‘ட்ரைட் பிரிவு’ மிகவும் ஆபத்தானது என்கிறார் மோனா.

“பெண்கள் வீட்டில் இருக்க வேண்டும், குழந்தைகளைப் பெற வேண்டும், முக்காடு அணிய வேண்டும், அதிகம் படிக்கக் கூடாது, காதல் திருமணங்களைச் செய்யக்கூடாது என்ற தாலிபன்களின் கருத்துகளைப் போலவே அவர்களது கருத்தும் உள்ளது. அவர்கள் வலுப்பெற்றால், சட்டம் - ஒழுங்கு முடிவுக்கு வந்துவிடும், பெண்களின் வாழ்க்கை 16 ஆம் நூற்றாண்டுக்குத் திரும்பிவிடும்” என்று பிபிசியுடன் பேசிய மோனா குறிப்பிட்டார்.

2020 ஆம் ஆண்டில், முதல் பொதுமுடக்கம் அமலான நேரத்தில், இதுபோன்ற ‘ட்ரைட் கணக்குகள்’ மிகவும் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கின.

“முதலில் அவர்கள் பாஜக ஆதரவாளர் போலவே தோன்றினார்கள். எங்களைப் போலவே, இஸ்லாம், கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராகப் பேசினார்கள். ஆனால் என்னைப் போன்ற வலதுசாரி இந்துப் பெண்கள் அவர்களுடைய பழங்கால சித்தாந்தத்தை கேள்வி கேட்கத் தொடங்கியபோது, அவர்கள் எங்களையே குறிவைக்கத் தொடங்கினர். மது அருந்தும், மேற்கத்திய ஆடைகளை அணியும் நவீன படித்த பெண்களை அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள். தலித்துகள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை நாங்கள் ஆதரிக்காததால் அவர்கள் எங்களை முழுமையான இந்துக்களாக கருதுவதில்லை” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

“ட்ரைடுகளுக்கு’, பிரதமர் மோதியைக்கூட பிடிக்காது. இந்து நாட்டை உருவாக்குவதில் அவருக்கு திறமையில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். அவரை ‘மௌலானா மோதி’ என்று அழைக்கிறார்கள்” என்கிறார் மோனா. ●

# உ.பி. பாஜகவுக்கு ஆப்பு வைக்கிறது திராவிடன் மாடல்

ஜனவரி 19,2022 அன்று வெளிவந்த ‘இந்து’ ஆங்கில நாளேட்டில், உர்மினிஷ் என்ற பத்திரிக்கையாளரின் கட்டுரை தமிழ்நாட்டின் ‘திராவிடன் மாடல்’ உ.பி.யில் பாஜக வின் இந்துத்துவ அரசியலுக்கு கடும் நெருக்கடிகளை உருவாக்கி இருப்பதை படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. கட்டுரையாளர் மாநிலங்களவை தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குனராகவும் பணியாற்றியவர்.

அடுத்த பிரதமர் பதவிக்கு ஆர்.எஸ்.எஸ். தயார் செய்யும் ஆதித்யநாத் உபி முதல்வராக படுதோல்வியை சந்தித்திருக்கிறார் என்றும் இஸ்லாமியர்களை எதிரிகளாக்கி இந்துக்களை அணி திரட்டும் இந்துத்துவா வலையில் வீழ்வதற்கு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தலைவர்களும் குறிப்பாக இளைஞர்களும் தயாராக இல்லை. அவர்கள் சமூக நீதி கோட்பாட்டை பேசத் தொடங்கி விட்டார்கள் என்றும் அவர் கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்.


உபி மாநிலம் சட்ட மன்றத் தேர்தலை எதிர் கொள்ளும் நிலையில் அமைச்சரவையில் இருந்து பிற்படுத்தப்பட்ட அமைச்சர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் விலகி வருகிறார்கள். மண்டல் சமூக அரசியலிலிருந்து ‘கமண்டல்’ என்ற இந்துத்துவ அரசியலுக்கு உபியை மாற்ற முயன்றது பாஜகவும் ஆர்.எஸ்.எஸ்ஸும் ஆனால் கடந்த 5 அல்லது 7 ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இந்துத்துவ அரசியலில் ஆர்வம் காட்டாமல் அதிலிந்து விலகி தங்கள் சமூகத்திற்கான கல்வி, வேலை வாய்ப்பு, வாழ்வுரிமை, முன்னேற்றம் ஆகியவற்றில் தீவிரம் காட்டி வருகிறார்கள். பாஜக ஆட்சி இவற்றைப் பற்றிக் கவலைப்படாது. வகுப்பு வாத அரசியலுக்கு மட்டுமே முன்னுரிமை தருவதை அவர்கள் இப்போது உணரத் தொடங்கிவிட்டனர் என்று சுட்டிக்காட்டுகிறார் கட்டுரையாளர்.

பிற்படுத்தப்பட்டோருக்கு மருத்துவ உயர் பட்டப்படிப்புகளில் இட ஒதுக்கீடு வழங்க மறுத்த பாஜக ஆட்சி முன்னேறிய ஜாதியினருக்கு 10% இட ஒதுக்கீட்டில் துடிப்புடன் செயல்பட்டதும், விவசாயிகளின் போராட்டத்தை அலட்சியப் படுத்தியதும், மோடி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான தலைவர் என்ற பிம்பத்தை குலைத்துவிட்டது என்றும் கூறுகிறது அக்கட்டுரை.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சி தொடர்ந்த வழக்கின் வழியாக மருத்துவ உயர்கல்வியில் அனைவருக்கும் 27% இட ஒதுக்கீடு கிடைத்ததை சமூக வலைதளங்களில் உபி,பீகாரில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். குறிப்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டு வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டனர். (in this case the efforts of a regional party DMK in Tamilnadu to restore reservation has drawn applause from among backward communities in UP and Bihar. Social Media has been flooded with complementary messages for Tamilnadu Chief Minister M.K.Stalin)

கடந்த சில ஆண்டுகளாக, ஒரு சில படித்த அறிஞர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்த நாராயண குரு, அய்யங்காளி, பெரியார், சாகு மகராஜ், ஜோதி ராவ் பூலே மற்றும் சமூக சீர்திருத்த தலைவர்களின் பெயர்கள் அவர்களது கருத்துகள் இப்போது இந்தி பேசும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஒலிக்கத் தொடங்கி யிருக்கிறது. சமூக ஊடகங்களில் இளைஞர்களின் பதிவுகள் தான் இதற்கு மிகப் பெரும் தூண்டுதல் சக்தியாக அமைந்திருக்கிறது. என்பதை பல்வேறு தரவுகளுடன் விருவியிருக்கிறது அந்த கட்டுரை. தமிழ்நாட்டின் திராவிட மாடல் உபியில் பாஜக இந்துத்துவாவிற்கு நெருக்கடியை உண்டாக்கி இருப்பதை மையமாக வைத்து இந்தக் கட்டுரை இப்படி ஏராளமான செய்திகளை பதிவிட்டு இருக்கிறது.

## தகுதி, திறமை என்ற சொல்லே அரசாங்க அகராதியில் இருந்து எடுக்க வேண்டும்



பாஸ் செய்த பின்பு ‘தகுதி, திறமை, தரம்’ எதற்காகப் பார்க்கப்படுகின்றது ? அது எதற்காக வேண்டும் ? அதன் அர்த்தம் என்ன ? அதன் பலன் என்ன? மந்திரிசபையில் பெரிய பதவியில் அதிகாரத்தில் தரமுள்ளவர் களால், திறமை உள்ளவர்களால்’ ஏற்பட்ட நன்மை, பெருமை என்ன ? தகுதி, திறமை, தரம் அற்றவர்களால் ஏற்பட்ட கெடுதி என்ன ? அதிகாரம், உத்தியோகங்களிலும் வகுப்பு, உள்வகுப்பு, உட்பிரிவு, சாதி வகுப்புரிமை வேண்டும். சர்க்காருக்கு 50 கோடி ரூபாய், மது இலாகா மூலம் வருவாய் கிடைத்திருக்கிறது. இது யார், எந்த வகுப்பார் தந்த பணம், இந்த வருவாய் கொடுத்தவர்களை வடிகட்டுவதுதான் பலனா ? இதைக் கவனிக்க வேண்டும்.

கண்டிப்பாய் அரசாங்க அகராதியில் தகுதி, திறமை, தரம் என்ற சொற்களை எடுத்துவிட வேண்டும்.

இது என் சொந்த கருத்து.

**விடுதலை** 18.07.1972

## குடியாத்தத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேச்சு

# பெரியாருக்கும் பவுத்தத்துக்கும் உள்ள உறவு

***7.11.2021 அன்று குடியாத்தத்தில் 'நான் இந்துவாக இறக்கப் போவதில்லை' என்ற தலைப்பில் பெரியார் உரைகளின் தொகுப்பு குறித்து திறனாய்வுக் கூட்டம் நடந்தது. 'தலித் முரசு – காட்டாறு' இணைந்து வெளியிட்ட நூல் இது. இதில் பங்கேற்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரையிலிருந்து.***

"நான் இந்துவாக இறக்கப் போவதில்லை" என்ற தலைப்பின் மேல் சிலருக்கு முரண்பட்ட கருத்து உண்டு. வேறு தலைப்பை வைத்திருக்கலாமே என்று. "இந்து மதத்தை வேரறுப்போம்" என்று வைத்திருக்கலாமே என்றும் கூறினார்கள். புத்தகத்தில், "நான் இந்துவாக இறக்கப் போவதில்லை" என்று 1926இல் கூறியதாகவும், அம்பேத்கர் 1935இல் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் பெரியார் போகிற போக்கில் கூறிய கருத்து. ஆனால், அம்பேத்கர் திட்டவட்டமாக மாற வேண்டும் என்று அறிவித்த கருத்து. இரண்டையும் இணைத்துப் பார்ப்பதில் தான் எனக்கு கொஞ்சம் நெருடலாக இருக்கிறது. இருவரையும் இணைத்து பார்ப்பதற்கு என்றே சேர்த்ததாக தெரிந்தது.

சேஷாசலமாக பிறந்து, தமிழ் பற்றின் காரணமாக பூங்குன்றனாக மாறி, பெரியார் பற்றின் காரணமாக பெரியார் தாசன் ஆகி, அதன்பின் பவுத்தப் பற்றின் காரணமாக சித்தார்த்தா ஆகி, இஸ்லாமை ஏற்று அப்துல்லா ஆகி வாய்ப்புக் கேடாக இறந்துவிட்டார். இல்லையென்றால் இன்னும் வேறு எதற்கோ மாறியிருப்பார். அவர், 'பெரியார் இஸ்லாமை ஏற்றாரா? எதிர்த்தாரா?' என்ற கேள்வியை முன் வைத்தார். மற்றொரு கேள்வியையும் கேட்டார். பெரியாரிஸ்டுகள் ஏன் இன்னும் இஸ்லாமிற்கு மாறவில்லை? என்றும் கேட்டார். பெரியார், இஸ்லாமை ஏற்றாரா என்றால் ஏற்றார்; எதிர்த்தாரா என்றால் எதிர்த்தார். இரண்டுமே இருந்தது. புஷ் கூறியதை போல, 'நீ என் பக்கம் இல்லையென்றால் எதிர் பக்கம் தான்' என்று பெரியார் மாற்றியெல்லாம் பேசவில்லை. கருத்துக்களை வெளிப்படையாக, விமர்சனமாக வைத்தார். பௌத்தத்தைப் பற்றி அவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தார் என்பதை கூறியாக வேண்டும். குடியாத்தம் என்றாலே, பள்ளி கொண்டா கிருஷ்ணசாமியை எண்ணாமல் இருக்க முடியாது. அவர் தலைமையில் பெரியார், அக்டோபர் 1956 இல் வேலூர் நகராட்சியில், அம்பேத்கர் படத்தை திறந்து வைக்கிறார். அதற்கு பின் இரண்டு மாதங்கள் கழித்து தான் அம்பேத்கர் மறைந்தார். அதில் இரண்டு உரைகள் தான் படித்திருக்கிறோம். அதில் மூன்று உரைகள் வந்துள்ளன. அந்த மூன்றாவது உரையில் பௌத்தத்தைப் பற்றி பெரியார் பேசியிருக்கிறார். அந்த உரை இந்த புத்தகத்திலும் கொடுக்கப்பட் டுள்ளது.

அது என்னவென்றால், இருவரும் பர்மாவிற்கு செல்கிறார்கள் பௌத்த மாநாட்டிற்கு. இருவரும் உரையாடிக் கொண்டிருக்கும் போது, புத்த பிக்கு ஒருவர் வருகிறார். இருவரையும் பார்த்து, குறிப்பாக பெரியாரை பார்த்த படி, 'யார் நீங்கள்?' என்று கேட்கிறார். 'தெரியவில்லையா இவர்தான் பெரியார் இராமசாமி' என்று அம்பேத்கர் கூறுகிறார். அடுத்து, 'நீங்கள் பௌத்தத்தை வளர்க்க வந்தீர்களா ? ஒழிக்க வந்தீர்களா ?' என்று அந்த கேள்வியையும் பெரியாரை பார்த்து கேட்கிறார். அடுத்து பெரியார், 'நீ பார்ப்பனனாக இருந்து பௌத்தராக மாறியவரா?' என்று கேட்கிறார். 'ஆமாம் வங்காளத்தைச் சேர்ந்த பார்ப்பனர்' என்பதை அவர் கூறுகிறார். அப்போது பெரியார் அம்பேத்கரிடம், 'இவர்களை வைத்து தான் பௌத்தத்தை வளர்க்கப் போகிறீர்களா?' என்று வேடிக்கையாக கேட்கிறார்.

குலக்கல்வி எதிர்ப்பு மாநாடு பெரியார் நடத்துகிறார். அதில் பௌத்த மாநாட்டையும் இணைத்து நடத்துகிறார். மல்லசேகரா என்ற பௌத்த அறிஞரை அழைத்து பேச வைக்கிறார்.



மூன்று இடங்களில் பெரியார் பௌத்தத்தை நினைவூட்டிய வண்ணமே இருக்கிறார். 1953இல் விநாயகர் சிலை உடைப்பு, அடுத்து புத்தரின் பிறந்த நாளில் விநாயகரின் சிலையை உடைக்கிறார். 1956இல் புத்தரின் 2500ஆவது பிறந்த நாளில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார். அனைவரின் உரையையும் ஒலிபரப்பிய வானொலி பெரியாரின் உரையை மட்டும் ஒலிபரப்பவில்லை. பெரியார் அதற்கு கண்டனம் தெரிவிப்பதும் இல்லை. அந்த உரையில் தான் இராமர் பட எரிப்பு போராட்டத்தை அறிவிக்கிறார். பெரியாரின் நாத்திக போராட்டமாக இந்த இரண்டைத் தான் அறிய முடிகிறது. கடவுள் மறுப்பை மட்டும் கொண்டு பெரியார் போராட்டம் நடத்தியதாக இவற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை. கடவுள் மறுப்பாளர் என்று சொல்லிக் கொண்டே வந்தாலும், இரண்டே நாத்திக போராட்டம் தான் பெரியார் நடத்தியிருக்கிறார். ஒன்று பாஜக பொதுச் செயலாளர் விநாயகன்; மற்றொன்று தலைவர். ராமர். அந்த இரண்டையும் புத்தரை நினைவூட்டிய வண்ணமே செய்தார். குலக்கல்வி திட்டத்தை எதிர்த்து மாநாடு நடக்கிறது. அதில் முதல் நாள் குலக்கல்வி எதிர்ப்பு மாநாடு. இரண்டாவது நாள் பவுத்த மாநாடு தான் நடக்கிறது.

கடவுள்களின் பெயரால் நம் மீது சுமத்தப்பட்ட இழிவுகள். மற்றொரு பக்கம் அதை நடைமுறைப்படுத்த குலக்கல்வி திட்டம், இந்து மதத்தின் சூழ்ச்சியாகத்தான் குலக்கல்வியை பார்க்கிறார். அதற்கும் அவர் புத்தரை இணைத்துக் கொண்டு தான் வந்திருக்கிறார். புத்த மதத்தை பெரியார் எப்படி ஏற்றுக் கொண்டார் என்பதை நாம் பார்க்க வேண்டும். வெறும் சடங்காக ஏற்றுக் கொண்டவர்களைப் பற்றி புனிதப் பாண்டியன் விளக்கினார். 'ஜெய் பீம் காம்ரேட்' என்ற ஆவணப் படத்தை 'ஆனந்த் பட்வர்த்தன்' என்பவர் எடுத்திருந்தார். அதில் பவுத்தம் மாறியவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைக் காட்டியிருப்பார். எப்படிப்பட்ட பவுத்தத்தை பின்பற்ற வேண்டும் என்று அம்பேத்கர் கூறினாரோ, அதைத் தாங்கிய பள்ளிச் சிறுவன், 'என்னை, கடவுள் இல்லையென்று கூறுவதற்கு கேலி செய்தார்கள், கடவுள் இல்லாமல் எப்படி இருக்க முடியும் என்று கேட்டார்கள். நான் கூறினேன், ஆம் எங்கள் பவுத்தம் அப்படித் தான் கற்றுத் தந்திருக்கிறது' என்று. அதே போல் ஒரு பாட்டி பேசும்போது, 'நாங்கள் பவுத்தம் மாறிய பிறகு பவுத்தத்தைப் பரப்புவதற்குப் பாடல்களை பாடுவோம். அது கடவுள், ஜாதியை கேலி செய்யும் வகையில் தான் இருக்கும்' என்று ஒரு பாட்டி கூறுவார். படத்தில் 'தீக்ஷா பூமி' க்கு செல்லும் போது, நுழைவாயிலிலேயே மக்கள் வரும்போது கையில், கழுத்தில் கட்டியுள்ள கயிறுகளை வெட்டுவதற்கு ஆட்களை நிறுத்தி வைத்திருப்பார்கள். வெட்டி தான் உள்ளே அனுப்புவார்கள். இவையெல்லாம் அந்த ஆவணப் படத்தில் வரும் காட்சிகள். இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு பவுத்தராக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம்.

பெரியார் மதத்தை மூன்று கட்டமாக பார்க்கிறார். அது இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. முதலில் செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில், கடவுளுக்கென பணத்தை செலவழிக்காதீர்கள் என்பது மட்டும் தான் தீர்மானம். மற்றொன்று கடவுளுக்கும் வணங்குபவனுக்கும் இடையில் தரகரோ, வேறு ஒரு மொழியோ தேவையில்லை என்பது மற்றொரு தீர்மானம். எப்படி மூன்று கட்டமாக மதத்தை பெரியார் பார்த்தார் என்பதை பெரியாரே குறிப்பிடுகிறார் இவ்வாறு குறிப்பிடுகிறார், "நமது மத ஒழிப்பு உணர்ச்சியானது, சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த தினத்திலேயே பிரச்சாரம் செய்யப்பட்டு விடவில்லை. செங்கல்பட்டு மாநாட்டில் கடவுளுக்கென்று காசை தொலைக்க வேண்டாம் என்றோம், பூஜை, அபிசேகம், ஆராதனை, உற்சவம் ஆகியவை கூடாது என்றோம். ஈரோடு மாநாட்டில் கடவுளைப் பற்றி கவலைப் படாதே என்றோம். மூன்றாவது விருதுநகர் மாநாட்டில் தான் மதங்கள் கூடாது என்று கூறினோம்." மற்றொரு உரையில், "மதங்கள் வேண்டாமென்ற கருத்து முதலிலேயே இருந்திருந் தாலும், அதை கூறியிருந்தால் என்னுடன் யாரும் வந்திருக்க மாட்டார்களென்றும்" கூறியிருக்கிறார்.

ஈரோட்டில் 1930 இல் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பார்ப்பனரல்லாத, தமிழ் இசைக் கலைஞர்களை அறிமுகப்படுத்துவார். 'குடிஅரசில்' பட்டியலிட்டு இவர்களை அழையுங்கள் என்று அறிவிப்பு கொடுத்தார். 1940களில் தமிழிசைக் கிளர்ச்சி வெற்றி பெற்ற பின் கூறுகிறார், 'சமஸ்கிருதத்தில் பாடியிருந்தாலாவது யாருக்கும் புரிந்திருக்காது, நீ தமிழில் சாமி பாடல்களை பாடுகிறாய்' என்று கேட்டார். 1926லிருந்தே இஸ்லாமியர்களிடம் தனது கருத்தை தெரிவித்தவாறே வருகிறார் பெரியார். ஈரோடு, சத்தியமங்கலம், சாத்தான்குளம் இப்படி முகமது நபி பிறந்தநாள்களில் உரையாற்றுகிறார். 'உன்னை இந்து மதத்திற்கு மாற்று என்று நினைத்தால், சந்தனக்கூடு நடத்துகிறாய், நீயும் முட்டாள் தனமாக ஆடுகிறாய்' என்று கேட்டேன். அடுத்த ஆண்டு என்னை அழைக்க மாட்டார்கள் என்று நினைத்தேன். அழைத்தார்கள் ஆனால் அந்த விழாக்களை நிறுத்திவிட்டார்கள். இந்துக்கள் யாராவது இப்படி செய்வீர்களா? என்று பேசுகிறார். சத்தியமங்கலத்தில் பேசும் போது, ' உங்கள் இஸ்லாம் மதம் நல்ல மதம் தான். உடன்படுகிறேன். ஆனல் மனிதனை விட மதம் தான் பெரியது என்கிறீர்கள் அந்த ஒரு வருத்தம் எனக்கு இருக்கிறது' என்று பேசுகிறார். விமர்சனத்தை வைத்து தான் ஆதரிக் கிறார். முழுமையாக இஸ்லாமை ஆதரிக்கவில்லை. இந்நூலில் இதை பதிவு செய்துள்ளார்கள்.

இஸ்லாமை பரிந்துரைத்தவுடன், 'ஒரு சுயமரியாதைக்காரன் இப்படி பேசலாமா? ஒரு மதத்தை பரிந்துரைக்கலாமா? என்று கேள்விகள் கேட்கிறார்கள். அதற்கு பெரியார், 'தீவிர சுயமரியாதைக்காரர் ஒருவரை ஒரு தீண்டப்படாத குலத்தில் பிறந்த ஒருவர் கண்டு வணங்கி, 'அய்யா எனக்கு சாமியை விட்டுவிட போதிய அறிவு, தைரியமோ, தியாக புத்தியோ வரவில்லை, ஆனால் எனக்கு தீண்டாதவனாக இருக்க ஒரு நிமிடம் கூட சகிக்க முடியவில்லை. இதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள் பார்ப்போம்' என்று கேட்கிறார். அதற்கு நான் என்ன சொல்ல வேண்டும், 'நான் சுயமரியாதைக்காரன், எனக்கு சாமியைப் பற்றி கவலையில்லை, நீ தீண்டாதவனாகவே இருந்து செத்துப் போ' என்று கூற வேண்டுமா? அப்படி சொல்ல முடியுமா? அப்படி இருப்பவர்களுக்கு கூறுகிறேன். முகமதிய மதத்தில் பல கெடுதிகள் இருக்கலாம், கோஷா இருக்கலாம், கடவுள் இருக்கலாம், மூட நம்பிக்கை இருக்கலாம், மதச் சின்னம், மதச் சடங்கு இருக்கலாம், சமதர்மம் இல்லாமலும் இருக்கலாம் இவையெல்லாம் சுயமரியாதைக் காரருக்கு கூடாதாய் இருக்கலாம். மற்றும் பெண்ணுரிமை மாத்திரம் பேணுபவர்களுக்கு

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY  TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM  REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கோ.இளவரசன் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு !



கடந்த 05.01.2022 அன்று மறைந்த கழகத் தோழர் கோ. இளவரசன் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு, 20.01.2022 அன்று சென்னை சேத்துப்பட்டு கோ. இளவரசன் இல்லத்தில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் படத்தை திறந்து வைத்து, நினைவேந்தல் உரையாற்றினார்.

விடுதலை சிறுத்தைகள், இந்திய குடியரசுக் கட்சி, மக்கள் அதிகாரம் போன்ற அமைப்புகளின் நிர்வாகிகளும் கலந்து கொண்டு கோ. இளவரசனின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இளவரசன் தனது மரணத்தின்போது எந்த சடங்குகளும் இடம் பெறக் கூடாது என்று தமது துணைவியாரிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். 54 வயதில் துணைவரை இழந்த அவரது இணையர், உறவினர் எதிர்ப்புகளைப் புறந்தள்ளி எவ்வித சடங்குகளும் இன்றி இறுதி நிகழ்வுகளை கழகத் தோழர்களின் ஆதரவுடன் நடத்திக் காட்டினார்.

மறைவுச் செய்தி அறிந்த சென்னை மாவட்டக் கழகத் தோழர் களுடன் விரைந்து சென்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர். துணைவர் படத் திறப்பு நிகழ்விலும் வாழ்விணையர் பங்கேற்றதோடு, கழக நிகழ்வுகளில் பங்கேற்கத் தோழர்களிடம் விருப்பம் தெரிவித்தார்.

நிகழ்வில், சேத்துப்பட்டு இராசேந்திரன் கழக வளர்ச்சி நிதியாக ரூ.5000/-யை, கழகப் பொதுச் செயலாளரிடம் வழங்கினார்.

இறுதியாக, சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி நன்றி கூறினார்.

**வாசகர்களுக்கு...**

வரும் வாரத்திலிருந்து 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் சந்தாவைப் புதுப்பித்தவர்களுக்கு மட்டும் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– நிர்வாகி, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகமதிய மதம் வேண்டாதவையாய் இருக்கலாம். மூடச்சடங்கு அனுஷ்டிக்காதவர் களுக்கும் முகமதிய மதம் வேண்டாதவையாய் இருக்கலாம். மத வேஷமும், மத சடங்கும் பயனற்றதாய் நினைப்பவர் களுக்கு முகமதிய மதம் வேண்டாதாய் இருக்கலாம். நாஸ்தி கருக்கும், பகுத்தறிவாளருக்கும் முகமதிய மதம் வேண்டாதாய் இருக்கலாம். சமதர்மவாதிக்கும், பொதுவுடைமைக்காரருக்கும் முகமதிய மதம் வேண்டாதாய் இருக்கலாம். ஆனால் தீயர்கள், புலையர்கள், பறையர்கள், நாயாடிகள் என்று தாழ்த்தப்பட்டு, ஒதுக்கப்பட்டிருக்கிற நாயிலும், மலத்திலும் புழுத்த விசக் கிருமிகளிலும் கேவலமாக மதிக்கப்பட்டு வரும் மக்களிடம், தங்கள் மீதிருக்கும் தீண்டாமை மாத்திரம் ஒழிந்தால் போதும் என்று கருதிக் கொண்டிருக்கும் மக்களிடம் வேலையுண்டா இல்லையா என்று கேட்கிறேன்" அவர்களுக்கு பரிந்துரைக்கிற பரிந்துரையாகத் தான் மதமாற்றத்தைக் கூறுகிறார்.

1931 சாத்தான்குளத்தில் பேசும்போது, "என்னை நீங்கள் அழைப்பதே வேடிக்கையாக இருக்கிறது. நானோ மதம் கூடாது என்பவன். மதம் மனிதனை மூடமாக்கும் என்பவன். எங்காட்கள் என்னை அழைக்க மாட்டார்கள், நீங்கள் என்னை தைரியமாக அழைக்கிறீர்கள். உங்கள் நிகழ்வில் இந்துவாகிய என்னை அழைக்கிறீர்கள், ஆனால் இந்துக்கள் நிகழ்வில் முஸ்லீம் யாரையாவது அழைத்து பேச வைப்பார்களா ?" என்று பேசுகிறார். அதில் அடிக்கடி 'மத வேஷம் போடு' என்று குறிப்பிடுகிறார். இஸ்லாமிய மத வேஷம் போடு என்று குறிப்பிடுகிறார். 'நீ உண்மையான இஸ்லாமியனோ பொய்யான இஸ்லாமியனோ, நாஸ்திகனோ, ஆஸ்திகனோ எப்படியோ இரு. ஆனால் 5 மணிக்கு இஸ்லாமுக்கு மாறினால் 5.15க்கு உன் மேல் உள்ள தீண்டாமை ஒழிந்து விடும்' என்கிறார்.

(தொடரும்)

# ஜல்லிக்கட்டில் பங்கேற்ற தலித் இளைஞர்கள் மீது ஜாதி வெறியர் தாக்குதல்



மதுரை மாவட்டம் மேலூர் வெள்ள லூர் பகுதிக்குட்பட்ட கிராமங்களான பழையூர் பட்டி, உச்சரிச்சான் பட்டி ஆகிய ஊர்களில் பொங்கல் விழாவை கொண்டாடியதற்காக பட்டியல் சமூக இளைஞர்களை கட்டி வைத்து ஜாதியவாதிகள் தாக்கியுள்ளார்கள்..

சம்பவம் நடந்த மறுதினம் தாக்குதலுக்குள்ளான இளைஞர்களையும் - மக்களையும் மதுரை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாவட்ட செயலாளர் மணி அமுதன், புறநகர் மாவட்ட செயலாளர் பிரபாகரன், மேலூர் பொறுப்பாளர்கள் சத்ய மூர்த்தி, கருப்பையா உள்ளிட்டோர் சந்தித்தனர்.

மேலும் அதே வெள்ளலூர் அருகே அலங்கம்பட்டியில் ஜல்லிக்கட்டில் கலந்து கொண்ட பட்டியல் சமூக இளைஞர் மீதும் ஜாதியவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட இளைஞரை மாவட்ட செயலாளர் மணி அமுதன், ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் நிலவழகன் உள்ளிட்டோர் சந்தித்தனர்.

மதுரை மாவட்டம் மேலூர் வெள்ளலூர் பகுதிகளான பழையூர் பட்டி, உச்சாரிச்சான் பட்டி, அலங்கம்பட்டி பகுதிகளில் நடைபெற்ற ஜாதிய தாக்குதல், திருவண்ணாமலை வீரளூரில் நடைபெற்ற ஜாதிய தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்து மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜனவரி 28 காலை 10 மணிக்கு அண்ணா பேருந்து நிலையம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

# 'ராஜாஜி' பார்ப்பனராக இருந்தாலும் தென்னாட்டுக்காரர் என்று பார்த்தார், பெரியார்

டெல்லி குடியரசு தின அணிவகுப்பில் மறுக்கப்பட்ட தமிழக அரசின் ஊர்திகள், சென்னையில் நடைபெறுகிற தமிழக அரசின் குடியரசு நாள் விழாவில் அலங்கரித்து ஊர்வலமாக கொண்டு வரப்படும் என்ற சரியான பதிலடியை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். அதுமட்டுமின்றி தமிழ்நாட்டின் முக்கிய ஊர்கள் தோறும், இந்த தமிழ்நாட்டு போராட்ட வீரர்களின் ஊர்திகள் அணிவகுத்து மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்ற அறிவிப்பையும் வெளியிட்டு இருக்கிறார்.

குடியரசு நாளை கொண்டாடுகிற டெல்லி, தமிழ்நாட்டை ஓரங்கட்டி, புறக்கணிக்க நினைத்தாலும் தமிழ்நாடு தனக்குள்ள இறையாண்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியநாட்டுக் குடியரசில் தமிழகத்தில் போராடிய தலைவர்களுக்கு உரிய மரியாதை தரப்படும் என்ற செய்தியை நாட்டிற்கு முதலமைச்சரின் இந்த அறிவிப்பு வெளிப்படுத்துகிறது.

இந்த சூழ்நிலையில் பெரியாரின் கருத்து ஒன்றை சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறோம். ஜனவரி 26ஆம் நாள் குடியரசு நாள் அமுலுக்கு வந்த நாளை பெரியார் அதைத் துக்க நாள் என்று கூறியதோடு மற்றொரு கருத்தையும் வெளியிட்டார். "புதிய குடியரசுத் தலைவராக டாக்டர் இராசேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்படுவதால், இராஜகோபாலாச்சாரி தனது கவர்னர் ஜெனரல் பதவியை முடித்துக் கொண்டு தென்னாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவது நமக்கு கிடைத்த வெற்றி. பார்ப்பனர் ஆனாலும் கூட அவர் தென்னாட்டுக்காரர். தேவையில்லை. வடநாட்டுக்காரருக்கென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதல்லவா ! மேலும் விரைவில் சுமையை இறக்கி வைத்துவிட்டு இங்கே வந்து விடுவதாக ஆச்சாரியார் முன்பே கூறி சென்றிருக்கிறாராம். வந்த பின் அவர் நமக்கு பயன்படுகிறாரா என்று பார்க்கலாம்" என்று பெரியார் கூறியிருக்கிறார்.

ஆக, இராஜாஜி ஒரு பார்ப்பனராக இருந்தாலும் கூட அவர் தென்னாட்டுக்காரர் என்று வடநாட்டிலிருந்து விடைபெற்று வருவதை அரவணைத்து அறிக்கை வெளியிட்டவர் பெரியார். அதே பார்வையில் தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களை வடநாடு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மீண்டும் அது தமிழ்நாட்டிற்கே திரும்பி வந்து தமிழ்நாட்டுக் குடியரசு தின விழாவில் கம்பீரமாக பவனி வருவது என்பது தமிழ்நாட்டுக் குடியரசிற்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றி ! தமிழர்கள் ஒவ்வொருவரும் இதற்காக பெருமைப்படுவோம், முதல்வருக்கு நன்றி செலுத்துவோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP  Posted: 27th January 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN